சுருக்கம்

வேளாண்மைத்துறை – பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – திருமதி D. சுமதி – இளநிலை உதவியாளர் (பிஅ) பதவியில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை (வேநி9) துறை

அரசாணை (3டி) எண் 6

நாள்: 02.01.2020
விகாரி வருடம்,
மார்கழி திங்கள் 17
திருவள்ளுவர் ஆண்டு 2050

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண் 100, பணியாளர் (ம) நிர்வாகச் சீர்த்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018.
2. வேளாண்மை இயக்குநர் அவர்களின் கடித எண் அநிபி3 / 138240 / 2018, நாள் 07.06.2019.

******

ஆணை:

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மதுரை வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் கட்டுப்பாட்டில் அலங்காநல்லூர் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் உதவி வேளாண்மை அலுவலராகப் பணிபுரிந்துவந்தபோது 07.04.2011 அன்று பணிக்காலத்தில் காலமான எம். திருநாவுக்கரசு அவர்களின் குடும்பம் வறிய நிலையில் உள்ளதாக வட்டாட்சியர் வழங்கிய சான்றின் அடிப்படையில் அவரது வாரிசு/மனைவி திருமதி D. சுமதி என்பவரின் கல்விச் சான்றுகள் மற்றும் இதர ஆவணங்களைப் பரிசீலித்து வேளாண்மை இயக்குநரக செயல்முறை ஆணை எண் அநிபி6 / 36521 / 2018, நாள் 01.10.2018–இன்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் (பிஅ) ஆக தற்காலிகமாகப் பணி நியமனம் செய்து ஆணையிடப்பட்டு, மதுரை, வேளாண்மை இணை இயக்குநருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து தனியர், மதுரை, வேளாண்மை இணை இயக்குநரின் செயல்முறை ஆணை எண் பநி3 / 15878 / 2018, நாள் 22.10.2018–இன்படி, 26.10.2018 முற்பகல் மதுரை மாவட்ட மேலூர், வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளர்(பிஅ) ஆகப் பணியில் சேர்ந்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளதோடு, கருணை அடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளர் (பிஅ) ஆக நியமனம் செய்யப்பட்ட திருமதி D. சுமதி அவர்களின் பணியினை 26.10.2018 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி ஆணை வழங்குமாறு வேளாண்மை இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

Scanned by CamScanner

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறை செய்வதில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளதாக ஆணையிடப்பட்டுள்ளது.

3. இந்நிலையில் வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, கருணை அடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளர் (பிஆ) ஆகப் பணி நியமனம் செய்யப்பட்ட திருமதி D. சுமதி என்பவர், அப்பணியிடத்திற்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், அவரது பணியினை 26.10.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலும், இளநிலை உதவியாளர் (பிஆ) ஆக நியமனம் செய்யப்பட்ட தனியரின் பணி 26.10.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்யப்படுவதால், அவர் இரண்டாவது மற்றும் அடுத்தடுத்த ஆண்டு ஊதிய உயர்வுக்குத் தகுதியுடைவராகிறார்.

5. இவ்வாணை தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத்துறையின் அ. சா. எண் 19555 / க்யூ1 / 2019, நாள் 16.12.2019 மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறையின் அ. சா. எண். 42226 / ஜி2 / 2019, நாள் 24.12.2019–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
வேளாண்மை இயக்குநர், சேப்பாக்கம், சென்னை–5 (இ).
திருமதி D. சுமதி, இளநிலை உதவியாளர் (பிஆ)
(வழி: வேளாண்மை இயக்குநர், வேளாண்மைத்துறை, சென்னை–5)
மாவட்ட கருவூல அலுவலர் (தொடர்பு)
முதன்மை கணக்காய்வுத் தலைவர், சென்னை–18.
கணக்காய்வுத் தலைவர் (துணிக்கை–1), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (G&SSA), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (E&RSA), சென்னை–18.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை–9.

<u>நகல்</u>
தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத்துறை, சென்னை–9.
பணியாளர் (ம) நிர்வாகச் சீர்த்திருத்தத்துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

வ. சசிகுமார் 3/1/2020
பிரிவு அலுவலர்
3/1/2020

Scanned by CamScanner